**நாவுல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுன் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவுல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ஆயுர்வேத மருந்துகளின் இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டு பதியப்பட்டிருக்கவில்லை..

(ஆ) மீளாய்வாண்டில் பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா. 7,105,131 மூலதன மானியம், மீண்டெழும் மானியமென பதியப்பட்டிருந்ததால் மூலதன வருமானம் குறைவாகவும் மீண்டெழும் வருமானம் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் நிலையான வைப்பிற்கான வட்டி வருமானமாகிய ரூபா. 48,016 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 6 அலுமாரிகள், ஒரு அச்சு இயந்திரம் மற்றும் கூரைத் தகடுகளின் மொத்தப் பெறுமதியாகிய ரூபா 214,980 மீண்டெழும் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினுள் நாஉல பொது கழிவறைக் குழியினை அகற்றுவதற்காக செலவிடப்பட்ட ரூபா. 35,514 மூலதனச் செலவின் கீழ் பதியப்பட்டிருந்ததால் மூலதனச் செலவினம் சம அளவினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) நிதி பிரதியீடு செய்யப்பட வேண்டிய தேவையற்ற ஒரு தொழிற்பாட்டின் பெறுமதி கடன்பட்டோரின் கீழ் பதியப்பட்டமையினால் கடன்பட்டோர் மீதி ரூபா. 980,000 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) பௌதீக ரீதியில் செயற்பாடற்ற இரண்டு கட்டிடங்களின் பெறுமதி கணக்கில் பதியப்பட்டிருந்தமையினால், ரூபா. 186,500 இனால் காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கு மீதி கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களி காண்பிக்கப்படும் ரூபா 187,195,266 ஆன 8 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பயன்பாட்டிற்கு பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட வித்தியாசங்களின் கூட்டுத்தொகை 5,814,427 ஆக இருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 7 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,959,206 ஆனதுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட காலம் தீர்க்கப்படாமல் காணப்படும் ரூபா 2,687,966 ஆன மீதியொன்று உள்ளடங்கியுள்ளது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 2 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,528,848 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தீர்க்கப்படாமல் காணப்படும் ரூபா 2,483,577 மீதிகளும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக 4 கணக்கு மீதிகளுக்கான கூட்டுத்தொகை ரூபா 116,404,933 ஆன மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| (i) 96 ஆம் விதி | 5,442,861 | நிலையான வைப்புக்கள் பணத்தை முதலீடு செய்யும் போது பீ.எஸ். 35 இன் பிரகாரம் உறுதிச்சீட்டு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 217 ஆம் விதி | - | காணி மற்றும் கட்டிடங்கள் மீதான பதிவேடொன்று நாளாதுவரையாக பராமரித்திருக்கவில்லை. |
| (iii) 218 ஆம் விதி | | சகல காணி மற்றும் கட்டிடங்கள் பௌதீக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 இன் 41 ஆம் நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டததின் 22(1) ஆம் பிரிவு (1996 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய 935/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரம் | | ஒரு ஹெக்டேயருக்கு மேற்பட்ட காணியைப் துண்டாக்கும் 2 சந்தர்ப்பங்களின் போது சபைக்கு பொது நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட வேண்டிய காணி அளவினை விட 76 பேர்ச் குறைவாகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 13,341,726 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,901,185 ஆக இருந்தது.

மீளாய்வாண்டில் பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கிடைத்திருந்த மூலதன மானியம் ரூபா 7,105,131 மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் செயற்பாட்டு வருமானம் சமமான பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,718,000 | 1,655,539 | 1,356,726 | 1,416,942 | 1,729,000 | 1,655,539 | 2,310,814 | 1,096,470 |
| (ii) | வாடகை | 2,021,800 | 929,550 | 2,000,582 | 260,195 | 2,029,800 | 936,600 | 1,855,274 | 290,145 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,252,500 | - | 1,291,040 | - | 1,016,000 | - | 1,094,700 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,880,000 | 1,734,823 | 5,079,887 | 227,636 | 3,175,500 | 2,234,588 | 6,082,240 | 199,085 |

### 2.2.2 வீத வரி

(அ) மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,416,942 ஆனதுடன், ஆண்டின் பட்டியிடலான ரூபா 1,655,539 தொகை 95 சதவீதத்தை எடுத்திருந்தது

(ஆ) நாவுல நகரின் 13 இடங்களில் 3 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டு காலத்திற்கு இடைப்பட்ட நிலுவை வீதவரி மீதி ரூபா 128,593 ஆக இருந்ததுடன் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) 33 ஆம் விதியின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீர் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர் கட்டண வருமானம் ரூபா 227,636 ஆக காணப்பட்டது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 489,673 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 3,240,640 ஆக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூபா. 3,200,000 நிதி ஒதுக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 10 அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் வேறு 03 திட்டங்களுக்காக ரூபா. 2,950,000 செலவிடப்பட்டிருந்ததால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் பொழுதும் செயற்திட்டங்களைத் திட்டமிடும் பொழுதும் மக்களின் தேவைகள் மற்றும் ஏனைய விபரங்களை சரியாக அறிந்து திட்டமிடப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை

பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா. 195,000 ஒதுக்கீட்டின் கீழ் நாவுல வாராந்த சந்தையில் வாகன நிறுத்தல் வசதிகளை மேம்படுத்துவதற்கும் வாராந்த சந்தையில் வெட்டப்படுகின்ற மண்ணினால் நாலந்த நூலக வளாகத்தை நிரப்புவதற்குமாக வெளி நிறுவனமொன்றிலிருந்து மண் அகழ்வு இயந்திரமொன்று வாடகைக்குப் பெறப்பட்டு 213 கியூப் மண் அகழ்வதற்கான 27.5 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா. 178,750 செலுத்தப்பட்டிருந்தது. வெட்டப்பட்ட மண்ணில் 15 கியூப் மாத்திரம் நூலக வளாகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன், எதிர்பார்க்கப்பட்ட முறையில் நூலக வளாகத்தில் பாதுகாப்பு மதில் அமைக்கப்படாததன் காரணமாக வெட்டப்பட்ட 198 கியூப் மண் வாராந்த சந்தை வளவிலேயே இருந்தமை 2018 பெப்ரவரி 23 ஆம் திகதி நடாத்தப்பட்ட நிலைய ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் செயற்பாட்டுப் பிரதேசத்தினுள் அன்றாடம் சேகரிக்கப்படுகின்ற 1½ தொடக்கம் 2 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகள் சேருதன்டாபொல எனும் இடத்தில் கொட்டப்பட்டிருந்தது. உக்கக்கூடிய மற்றும் உக்காத வகைகளாக குப்பைகள் பிரிக்கப்பட்டிருந்த போதும் உக்கக்கூடிய கழிவுகளின் மூலம் உர உற்பத்தி மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உக்காத கழிவுகளை தீயிட்டுக் கொழுத்துவதற்கான முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2 ஏக்கர் 3 ரூட் பரப்புள்ள குறித்த நிலத்தினை சொந்தமாக்கிக் கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டு முதல் முடியாமல் போயுள்ளது.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் – 2030 இன் கீழ் சபையினால் சிறந்த சுகாதாரச் சூழல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களின் கீழ் நோயற்ற சமூகத்தினையும் வறுமை மற்றும் ஏற்றத்தாழ்வு ஆகிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதும் போதிய ஊழியர்கள் காணப்படாமை, வளங்கள் பற்றாக்குறை மற்றும் பயிற்சிக் குறைபாடுகள் ஆகிய காரணங்களினால் அவ்விலக்குகளை அடைவது சிக்கலான நிலைமையொன்றில் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) வரி அறவீட்டுக்காக பயன்படுத்தப்படும் கணனி மென்பொருளினூடாகப் பெறப்படும் நிலுவை அறிக்கை மற்றும் வரி அறவீட்டு ஆவணங்களுக்கிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன், கணனி அறிக்கைக்கமைவான மீதி இறுதிக் கணக்கு சமப்படுத்தலின் போது பயன்படுத்தப்பட்டிருந்த போதும் அம்மீதிகளின் வலுவற்ற தன்மையும் உறுதி செய்துகொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபைச் சட்டத்திற்கமைவாக வரி அறவிடக்கூடாத இடங்களும் 2009 ஆம் வருடம் மதிப்பிடப்பட்டு வரி அறவீட்டு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டு பட்டியலிடல் மற்றும் உரிமையாளர் முறையாக இனங்காணப்படாத வீதவரி அறவீட்டுக் கூறுகளுக்கான பட்டியலிடல் காரணமாக அவ்வரிகளை அறவிடுவதில் சிக்கலான நிலைமையொன்றில் காணப்பட்டது.

(இ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் ஆகிய மீதிகளினுள் காணப்பட்ட அரைப்பங்கு முடிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்ததும நிறைவேற்றப்பட்டு வரும் 6 தொழிற்பாடுகளின் பெறுமதியான ரூபா. 1,415,631 தொடர்பாக ஆராய்ந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை தனது அதிகாரப் பிரதேசத்தினுள் பொது சுகாதாரத்தினை மீளொழுங்கு படுத்துவது மற்றும் பாதுகாக்கும் பொது நிர்வாக அதிகாரியாக செயற்பட வேண்டியிருந்த போதும் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் சபையினால் பராமரிக்கப்படுகின்ற 3 நீர் விநியோகத் திட்டங்களில் நீரின் தரம் பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பொது அமைப்புகளினால் பராமரிக்கப்படுகின்ற 8 நீர் விநியோகத் திட்டங்களினால் விநியோகிக்கப்படுகின்ற நீர் தொடர்பான தர அறிக்கைக்கமைவாக நீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட போதிலும், சுத்திகரித்தல் செயன்முறைக்கு உட்படுத்தி அந்நீரை குடிப்பதற்கு உகந்த நீராக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமாக காணப்படும் 9 வாகனங்கள் மற்றும் 2 இயந்திரங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு இரண்டு சாரதிகள் மாத்திரம் காணப்படுவதன் காரணமாக ஆக்கபூர்வமாக வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) அஙககரிக்கப்பட்ட 7 வீதித்தொழிலாளர்கள் மற்றும் 9 சுகாதாரத் தொழிலாளர்கள் இருந்த போதிலும் உள்ளவாறான வீதித்தொழிலாளர்களின் எண்ணிக்கை 6 மற்றும் சுகாதார தொழிலாளர்களின் எ்ண்ணிக்கை 4 ஆக இருந்தமையாலும் இருக்கும் 3 வீதி தெழிலாளர்கள் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் சபையின் அன்றாட கடமகளை நிறைவேற்ற முடியாதி நிலைமையொன்று காணப்பட்டது.

(இ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட 5 ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகள் நாளதுவரையாக்கி நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னால் செயலாளரிடமிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாம் காணப்பம் ரூபா 199,920 ஆன கடன மீதியொன்று அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் கிடைக்கப்பெற்ற 175 கட்டிட விண்ணப்பங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 62 இணக்கப்பாட்டுச் சான்றுகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அடிப்படையில் மீளாய்வாண்டில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மதிப்பட்ட வாடகையொன்று அறவிடப்படாமல் 2013 மே 30 ஆந் திகதிய சபை தீர்மானத்தினை அடிப்படயாககக் கொண்டு 36 கடைகளிலிருந்து ரூபா 2,000 வீதம் வாடகை அறவிடப்பட்டிருந்தது.

**3.5 சொத்து முகாமைத்துவம்**

சொத்துகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

(அ) பொறுப்பளித்தல் கட்டளை மூலமாக பெறப்பட்டிருந்த பிரதேச சபைக்குச் சொந்தமான 4 காணிகள் மற்றும் பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற மேலும் 5 காணிகள் அளவீடு செய்யப்பட்டு உரித்தைப் பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், பிரதேச சபைக்குச் சொந்தமான 42 மயானங்களை இனங்கண்டு அளவீடு செய்து உரித்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துண்டாகப் பிரிக்கப்பட்டு ஏலமிடப்பட்ட காணிகளில் பிரதேச சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த 1 ஏக்கர் 3 ரூட் 17 பேர்ச் அடங்கிய 8 காணித் துண்டுகள் வேலியிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு பயனுள்ள வகையில் பொதுத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**3.5.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாது மத்திய மாகாண வர்த்தக, வாணிப மற்றும் சுற்றுலாத் திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் ரூபா. 2,452,591 செலவில் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வரலாற்று முக்கித்துவம் வாய்ந்த நாலந்தா கெடிகே சார்ந்த சுற்றுலா வசதிகள் நிலையம் மீளாய்வாண்டின் இறுதி வரை திறக்கப்பட முடியாமல் புதர்கள் வளர்ந்த நிலையில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார வேலைத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் ரூபா. 3,600,000 செலவில் 2008 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த அலுகொல்ல நில்தியதஹர மக்கள் நீர் வழங்கல் திட்டத்தின் நீர் பம்பு நிலையத்திற்கான மின்சார விநியோக வேலைகள் கடந்த 8 வருடங்களாக முடிக்கப்படாதிருந்ததன் காரணமாகவும் இரண்டாவது மக்கள் நீர் வழங்கல் மற்றும் சுகாதார வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா. 3,600,000 செலவில் 2008 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சேனாகம ஜல உதார சமுதாய் நீர் வழங்கல் திட்டத்தில் சேதமடைந்திருந்த மின்சார விநியோகத்தினை சீரமைத்திருக்காமையினாலும் திட்டங்கள் செயலிழந்த நிலையில் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.5.3 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலக்கம் PF – 7376 ஆம் இலக்க கெப் வண்டியொன்று ஈடுபுடுத்தப்பட்டிருந்த 6 சந்தர்ப்பங்களுக்குரிய கடமையில் ஈடுபடுத்திய உத்தியோகத்தர்களால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 இன் பிரகாரம் நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் கையொப்பமிட்டு கடமைப் பயணங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 பெப்ரவரி 06 ஆந் திகதி உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களில் பராமரிப்பு அலகிற்காக தேவையான அடிப்படை இயந்திர பொறிகளை பகிரும் நிகழ்ச்சித்திட்டத்தின் கழ் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,967,144 பெறுமதியுடன் கூடிய வீதிப்பதப்படுத்தல் கருவி 2016 ஆம் ஆண்டு முதல் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் காணப்பட்டது.

**3.6 பெறுகை செயற்பாடு**

**3.6.1 பெறுகை திட்டம்**

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்று, சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 2,511,314 கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வழிகாட்டல் கோவையின் 4.2.2 இன் பிரகாரம் பெறுகை கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்பட்டிருகக்வில்லை.

**3.6.2 வழங்கள் மற்றும் சேவைகள்**

2017 ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுகள் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கோரப்பட்ட கூறுவிலைகள் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 178(7)(2) இன் பிரகாரம் கேள்வி பெட்டியில் இடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா. 865,893 பெறுமதியான கொள்வனவுகளுடன் தொடர்பான கூறுவிலைகள் அனுப்பிய கடித உரைகளில் 178(7)(4) மற்றும் (5) விதிகளின் பிரகாரம் தின மத்திரை இடப்படாமல் கேள்வி கோரல் இறுதி திகதிக்கு முன்னர் அக்கூறுவிலைகள் கிடைக்கப்பெற்றதா என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 291,397 ஆன இரண்டு கொள்வனவு சந்தர்ப்பங்களின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலையை விட கூடிய விலையொன்று சமர்ப்பித்த வழங்குனரை தெரிவுசெய்யும் போது 178(9)(4) விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.6 இன் பிரகாரம் மிகவும் குறுகிய மற்றும் தெளிவான விதப்புரைகள் சமர்ப்பிக்கப்படாமல் 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 449,497 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.6.3 ஒப்பந்த நிர்வாகம்**

**கினிஹிரி மலை நீர் விநியோகத் திட்டம்**

மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கலின் கீழ் 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் முறையே பெறப்பட்ட ரூபா. 1,000,000 மற்றும் ரூபா. 1,500,000 நிதி ஒதுக்கீட்டில் குறித்த திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திட்டத்தின் நீர்த் களஞ்சிய தாங்கிகளை அமைப்பதற்கு 30 செலவுத் விடயங்களுக்காக உழைப்பு பங்களிப்புடன் இணைந்ததாக ரூபா. 1,500,000 இற்கான உத்தேச செலவு மதிப்பிடப்பட்டிருந்த போதும் திட்டத்தினை செயற்படுத்துகையில் உத்தேச செலவுத் விடயங்களுக்கு மேலதிகமாக ரூபா. 67,227 இற்கான 4 புதிய செலவுத் விடயங்களுக்கான மதிப்பீடு செய்வதற்கும், 5 செலவுத் விடயங்களுக்கான மதிப்பீட்டுத் தொகையை ரூபா. 245,902 இனால் அதிகரிப்பதற்கும் மதிப்பிடப்பட்டிருந்த ரூபா. 227,461 பெறுமதியான 6 செலவு விடயங்களை செயற்படுத்த வேண்டி ஏற்படாததன் காரணமாகவும் முறையான நிலைய பரிசோதனை மற்றும் ஆய்வு நடாத்தப்பட்டதன் பின்னர் மதிப்பீடு தயாரித்தல் இடம் பெற்றிருக்கருக்கவில்லை.

(ஆ) நீர் மூலங்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த கிணற்றில் அடியில் கருங்கல் மற்றும் தூள் கல் வெளியாகியிருப்பதாக நிலைய ஆய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், கிணற்று நீரின் தரம் தொடர்பிலான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 5 வருமான விடயங்களில் 18 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சில் இலககிடப்பட்ட வருமானம் எதுவும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 4 வருமான விடயங்களில் வருமானம் மதிப்பிடப்படாமல் ரூபா 11,707,673ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தன.

(இ) 16 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 36 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் காணப்பட்டன.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் 20 செலவின விடயங்களில் நிதிஏற்பாட்டு எல்லையை விஞ்சி ரூபா 3,075,984 செலவிடப்பட்டிருந்தது.

(உ) 15 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 376,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் சபையின் பலவீனங்களை தவிர்த்துக்கொள்வதற்காக ஆக்கபூர்வமான முறையில் அக்குழுத் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | (i) ஏடுகள் முறையாக பராமரிக்காமை<br>(ii) வருமானம் வங்கியிலிடுவில் தாமதம் |
| (ஆ) | பதவியணியினர் முகாமைத்துவம். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | சொத்துக்கள் / ஆதனங்கள் முகாமைத்துவம் | (i) பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>(ii) சொத்துக்களின் சரியான பெறுமதி உறுதிப்படுத்தப்படாமை<br>(iii) சொத்துக்கள் குறைப் பயன்பாட்டுடனும் விளைவற்றும் காணப்பட்டமை.<br>(iv) சொத்துக்களின் உரித்து மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை<br>(ii) வருமான இலக்கை பூர்த்தி செய்யாமை |